

Voice of Jagadguru



advaitam paramanandam

an e-magazine on advaita

We submit our efforts at the Lotus feet of Jagadguru Śankarācārya His Holiness Mahāsannidhānam Śrī Śrī Srī Bhāratī Tīrtha Mahāswāmiji and Jagadguru Śankarācārya His Holiness Sannidhānam Śrī Śrī Śrī Vidhuśekhara Bhāratī Mahāswāmiji

स्वर्ण भारती

माण्डूक्योपनिषद्

ஸ்வர்ண பா^{4}ரதீ

மாண்டூ^{3}க்யோபநிஷத்^{3}

வரிசை எண் **10**

We submit our efforts at the Lotus feet of Jagadguru Śankarācārya His Holiness Mahāsannidhānam Śrī Śrī Srī Bhāratī Tīrtha Mahāswāmiji and Jagadguru Śankarācārya His Holiness Sannidhānam Śrī Śrī Śrī Vidhuśekhara Bhāratī Mahāswāmiji

श्री श्री जगद्गुरु शङ्कराचार्य महासंस्थानम्,
दक्षिणाम्नाय श्रीशारदापीठम्, शृङ्गेरी

Sri Sri Jagadguru Shankaracharya Mahasamsthanam
Dakshinamnaya Sri Sharada Peetham, Sringeri - 577 139.

शृङ्गगिरिः १३.४.२०२४

दक्षिणाम्नायशृङ्गेरीशारदापीठाधीश्वराणाम् अनन्तश्रीविभूषितानां परमपूज्यानां जगद्गुरु शङ्कराचार्याणां श्रीभारतीतीर्थमहास्वामिनां संन्याश्रमस्वीकारस्वर्णमहोत्सवसन्दर्भं पुरस्कृत्य मुद्रितचराणां अधुना दुर्लभंगतानां विशिष्टानां गैर्वाणीग्रन्थाणां अन्तर्जालमाध्यमेन पुनः प्रकाशनं क्रियत इति विदित्वा जगद्गुरुचरणाः नितराममोदन्त । श्रीशारदाचन्द्रमौलीश्वरयोरसीमया कृपया कार्यमिदं सुष्ठु प्रवर्तताम्, कार्येऽस्मिन् कृतसाह्यास्समेऽपि सज्जनाः श्रेयांसि समधिगच्छन्त्विति च श्रीजगद्गुरुचरणा आशासते ।

इति निवेदयिता
टि दक्षिणामूर्तिः

Phone: 08265 - 250123 / 250192 • Fax: 08265 - 250792
E-mail: info@sringerisharadapeetham.org • www.sringerisharadapeetham.org

ஜகத்குரு சங்கராசாரியர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள் மற்றும் ஜகத்குரு சங்கராசாரியர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸந்நிநானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விதுசேகர பாரதீ மஹாஸ்வாமிகளின் பொற்பாதங்களில் எங்களின் முயற்சியை சமர்ப்பிக்கிறோம்.

மாண்டு³க்ய உபநிஷத் என்ற இந்த நூல் எளிமையாகவும், ப்ரதி பத அர்த்தத்துடனும் மிகவும் அழகாகவும் ஸாதகர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக விளங்கும் இந்த நூல் பூஜ்யஸ்ரீ ஸ்வாமி குருபராநந்தர், ஸ்தாபகர் பூர்ணாலயா, சென்னை மற்றும் Mentor ஸ்ரீ சித்பவானந்த ஆஸ்ரமம், தேனி அவர்களால் இங்கு வழங்கப்பட்டுள்ளது. ஸ்வாமிஜி அவர்களுக்கு எங்களின் மனமார்ந்த நன்றிகள் .

இப்படிக்கு,
ஸ்ரீமதி வீரமணி.

॥श्रीगुरुवन्दनम्॥

श्रीगुरुभ्यो नमः

शङ्कारूपेण मच्चित्तं पङ्कीकृतमभूद्यया ।
किङ्करी यस्य सा माया शङ्काराचार्यमाश्रये ॥
प्रह्लादवरदो देवो यो नृसिंहः परो हरिः ।
नृसिंहोपासकं नित्यं तं नृसिंहगुरुं भजे ॥
श्रीसच्चिदानन्दशिवाभिनव्यनृसिंहभारत्यभिधान् यतीन्द्रान् ।
विद्यानिधीन् मन्त्रनिधीन् सदात्मनिष्ठान् भजे मानवशम्भुरूपान् ॥
सदात्मध्याननिरतं विषयेभ्यः पराङ्मुखम् ।
नौमि शास्त्रेषु निष्णातं चन्द्रशेखरभारतीम् ॥
विवेकिनं महाप्रज्ञं धैर्यौदार्यक्षमानिधिम् ।
सदाभिनवपूर्वं तं विद्यातीर्थगुरुं भजे ॥
अज्ञानां जाह्नवीतीर्थं विद्यातीर्थं विवेकिनाम् ।
सर्वेषां सुखदं तीर्थं भारतीतीर्थमाश्रये ॥
विद्याविनयसम्पन्नं वीतरागं विवेकिनम् ।
वन्दे वेदान्ततत्त्वज्ञं विधुशेखरभारतीम् ॥
पञ्चाशल्लिपिभिर्विभक्तमुखदोः पन्मध्यवक्षस्थलां
भास्वन्मौलिनिबद्धचन्द्रशकलामापीनतुङ्गस्तनीम् ।
मुद्रामक्षगुणं सुधाढ्यकलशं
विद्याञ्च हस्ताम्बुजैः
बिभ्राणां विशदप्रभां त्रिनयनां वाग्देवतामाश्रये ॥

श्रीमत्परमहंस-परिव्राजकाचार्यवर्य-पदवाक्यप्रमाणपारावारपारीण-यमनियमासनप्राणायामप्रत्याहारधारणाध्यानसमाध्यष्टाङ्गयोगानुष्ठाननिष्ठ-तपश्चक्रवर्ति-अनाद्यविच्छिन्नश्रीशङ्कराचार्यगुरुपरंपराप्राप्त-षड्दर्शनस्थापनाचार्य-व्याख्यानसिंहासनाधीश्वर-सकलनिगमागमसारहृदय-सांख्यत्रयप्रतिपादक-वैदिकमार्गप्रवर्तक-सर्वतन्त्रस्वतन्त्र-आदिराजधानी-विद्यानगरमहाराजधानी-कर्णाटकसिंहासनप्रतिष्ठापनाचार्य-श्रीमद्राजाधिराजगुरु-भूमण्डलाचार्य-ऋष्यशृङ्गपुरवराधीश्वर-तुङ्गभद्रातीरवासि-श्रीमद्विद्याशङ्करपादपद्माराधक-

श्रीमज्जगद्गुरु-श्रीमदभिनवविद्यातीर्थमहास्वामिगुरुकरकमलसञ्जात-

श्रीमज्जगद्गुरु-श्रीभारतीतीर्थमहास्वामिनां-

तत्करकमलसञ्जात-श्रीमज्जगद्गुरु-श्रीविधुशेखरभारतीमहास्वामिनां च चरणारविन्दयोः साष्टाङ्गप्रणामान् समर्पयामः ॥

||ஸ்ரீகு³ருவந்த³னம்||

ஸ்ரீகு³ருப்⁴யோ நம꞉

ஶங்காரூபேண மச்சித்தம்’ பங்கீக்ரு’தமபூ⁴த்³யயா |
கிங்கரீ யஸ்ய ஸா மாயா ஶங்காராசார்யமாஶ்ரயே ||

ப்ரஹ்லாத³வரதோ³ தே³வோ யோ ந்ரு’ஸிம்’ஹ꞉ பரோ ஹரி꞉ |
ந்ரு’ஸிம்’ஹோபாஸகம்’ நித்யம்’ தம்’ ந்ரு’ஸிம்’ஹகு³ரும்’ ப⁴ஜே ||

ஸ்ரீஸச்சிதா³னந்த³ஶிவாபி⁴நவ்யந்ரு’ஸிம்’ஹபா⁴ரத்யபி⁴தா⁴ன் யதீந்த்³ரான் |
வித்³யாநிதீ⁴ன் மந்த்ரநிதீ⁴ன் ஸதா³த்மநிஷ்டா²ன் ப⁴ஜே மானவஶம்பு⁴ரூபான் ||

ஸதா³த்மத்⁴யானநிரதம்’ விஷயேப்⁴ய꞉ பராங்முக²ம் |
நௌமி ஶாஸ்த்ரேஷு நிஷ்ணாதம்’ சந்த்³ரஶேக²ரபா⁴ரதீம் ||

விவேகினம்’ மஹாப்ரஜ்ஞம்’ தை⁴ர்யௌதா³ர்யக்ஷமாநிதி⁴ம் |
ஸதா³பி⁴னவபூர்வம்’ தம்’ வித்³யாதீர்த²கு³ரும்’ ப⁴ஜே ||

அஜ்ஞானாம்’ ஜாஹ்னவீதீர்த²ம்’ வித்³யாதீர்த²ம்’ விவேகினாம் |
ஸர்வேஷாம்’ ஸுக²த³ம்’ தீர்த²ம்’ பா⁴ரதீதீர்த²மாஶ்ரயே ||

வித்³யாவினயஸம்பன்னம்’ வீதராக³ம்’ விவேகினம் |
வந்தே³ வேதா³ந்ததத்த்வஜ்ஞம்’ விது⁴ஶேக²ரபா⁴ரதீம் ||

பஞ்சாஶல்லிபிபி⁴ர்விப⁴க்தமுக²தோ³꞉ பன்மத்⁴யவக்ஷஸ்த²லாம்’
பா⁴ஸ்வன்மௌலிநிப³த்³த⁴சந்த்³ரஶகலாமாபீனதுங்க³ஸ்தனீம் |
முத்³ராமக்ஷகு³ணம்’ ஸுதா⁴ட்⁴யகலஶம்’
வித்³யாஞ்ச ஹஸ்தாம்பு³ஜை꞉
பி³ப்⁴ராணாம்’ விஶத³ப்ரபா⁴ம்’ த்ரிநயனாம்’ வாக்³தே³வதாமாஶ்ரயே ||

ஸ்ரீமத்பரமஹம்’ஸ-பரிவ்ராஜகாசார்யவர்ய-பத³வாக்யப்ரமாணபாராவாரபாரீண-யமநியமாஸனப்ராணாயாமப்ரத்யாஹாரதா⁴ரணாத்⁴யானஸமாத்⁴யஷ்டாங்க³யோகா³னுஷ்டா²னநிஷ்ட²-தபஶ்சக்ரவர்தி-அநாத்³யவிச்சி²ன்னஸ்ரீஶங்கராசார்யகு³ருபரம்பராப்ராப்த-ஷட்³த³ர்ஶனஸ்தா²பனாசார்ய-வ்யாக்²யானஸிம்’ஹாஸனாதீ⁴ஶ்வர-ஸகலநிக³மாக³மஸாரஹ்ரு’த³ய-ஸாங்க்²யத்ரயப்ரதிபாத³க-வைதி³கமார்க³ப்ரவர்தக-ஸர்வதந்த்ரஸ்வதந்த்ர-ஆதி³ராஜதா⁴னீ-வித்³யாநக³ரமஹாராஜதா⁴னீ-கர்ணாடகஸிம்’ஹாஸனப்ரதிஷ்டா²பனாசார்ய-ஸ்ரீமத்³ராஜாதி⁴ராஜகு³ரு-பூ⁴மண்ட³லாசார்ய-ரு’ஷ்யஶ்ரு’ங்க³புரவராதீ⁴ஶ்வர-துங்க³ப⁴த்³ராதீரவாஸி-ஸ்ரீமத்³வித்³யாஶங்கரபாத³பத்³மாராத⁴க-

ஸ்ரீமஜ்ஜக³த்³கு³ரு-ஸ்ரீமத³பி⁴னவவித்³யாதீர்த²மஹாஸ்வாமிகு³ருகரகமலஸஞ்ஜாத-

ஸ்ரீமஜ்ஜக³த்³கு³ரு-ஸ்ரீபா⁴ரதீதீர்த²மஹாஸ்வாமினாம்’-

தத்கரகமலஸஞ்ஜாத-ஸ்ரீமஜ்ஜக³த்³கு³ரு-ஸ்ரீவிது⁴ஶேக²ரபா⁴ரதீமஹாஸ்வாமினாம்’ ச சரணாரவிந்த³யோ꞉ ஸாஷ்டாங்க³ப்ரணாமான் ஸமர்பயாம꞉ ||

माण्डूक्योपनिषद्

மாண்டூ³க்யோபநிஷத்³

சாரம்

அதர்வண வேதத்தில் அமைந்துள்ள இவ்வுபநிஷத் ஓங்காரத்தின் துணைகொண்டும் ஜீவன் அனுபவிக்கின்ற மூன்று அவஸ்தைகளின் துணைகொண்டும் ஆத்ம தத்துவத்தை விளக்குகிறது.

ஓம் என்கின்ற எழுத்தே இவை அனைத்தும் என்று கூறப்பட்டு ஓங்காரத்தைப் பற்றிய விசாரம் செய்யப்பட இருக்கின்றது என்று உறுதிமொழி அளிக்கப்படுகிறது (1). இவை அனைத்தும் ப்ரஹ்மன் என்று கூறப்பட்டு, இந்த ஆத்மாவே ப்ரஹ்மன் என்கின்ற மஹா வாக்யத்துடன் ஆத்மவிசாரம் ஆரம்பமாகிறது (2). ஆத்மா நான்கு பாதங்களாக அதாவது பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, முறையாக விளக்கப்படுகிறது. ஆத்மா, ஸ்தூல சரீரத்துடன் அபிமானம் வைக்கும்பொழுது விச்வன் என்ற பெயரைப் பெற்று வெளி உலகத்தை அனுபவித்து விழிப்பு நிலையை அடைகிறது. இது ஆத்மாவின் முதல் பாதம் (3). அதே ஆத்மாவானது ஸூக்ஷ்மசரீரத்தை மட்டும் அபிமானிக்கும் பொழுது ஸூக்ஷ்மமான பொருள்களை அனுபவித்துக் கனவு நிலையை அடைகிறது. அப்பொழுது ஆத்மாவுக்கு தைஜசன் என்ற பெயர் அமைகிறது. இது ஆத்மாவின் இரண்டாவது பாதம் (4). அதே ஆத்மாவானது காரணசரீரத்தை மட்டும் அபிமானிக்கும் பொழுது எந்தப் பொருள்களையும் அனுபவிக்காமல் அறியாமையையும் சுகத்தையும் மட்டும் அனுபவிக்கிறது. அப்பொழுது ஆத்மாவுக்கு ப்ராஞன் என்ற பெயர் அமைகிறது. இது ஆத்மாவின் மூன்றாவது பாதம் (5). இவ்விதம் ஆத்ம தத்துவத்தில் மூன்று உடல்களும் அதன் விளைவாக வரும் மூன்று அவஸ்தைகளும் ஏற்றி வைக்கப்பட்ட பின், இவ்வனைத்து உலகமும் அதே ஆத்மாவில் ஏற்றி வைக்கப்படும்பொழுது ஈச்வரன் என்ற தத்துவம் வெளிப்படுகிறது. அந்த ஈச்வரன், அனைத்தையும் அறிபவராகவும் அனைத்துக்கும் உபாதான காரணமாகவும் நிமித்த காரணமாகவும் விளங்குகிறார் (6).

ஆத்மாவின் மூன்று பாதங்கள் கூறப்பட்ட பின் நான்காவது பாதம் என்ன என்ற எதிர்பார்ப்பு வரும்பொழுது அப்பாதம் ஏழாவது மந்தரத்தில் விளக்கப்படுகிறது. நான்காவது என்பது ஸம்ஸ்க்ருதத்தில் துரீயம் என்று அழைக்கப்படுகின்றது. ஆத்மாவின் நான்காவது பாதம் ஓர் அவஸ்தை அல்ல. எந்த ஓர் அனாத்மாவுடனும் சம்பந்தப்பட்டதல்ல. அறிவு ஸ்வரூபமான எந்த ஓர் ஆத்மா மூன்று அவஸ்தைகளிலும் மாறாது ஒன்றாகவே இருந்து கொண்டிருக்கிறதோ அந்த ஆத்மா, துரீயம் என்று அழைக்கப்படுகிறது. அந்த ஆத்மா விச்வன் அல்ல. ஆனால் அந்த ஆத்மாவைச் சார்ந்து விச்வன் இருக்கிறான். தூய ஆத்மாவுக்கு விச்வன், தைஜஸன், ப்ராஞன் என்ற தன்மைகள் பொய்யான சரீர நிமித்தமாக வந்துள்ளன. ஆகவே, ஆத்மாவின் துரீய ஸ்வரூபம் ஸத்யமாகவும், முதல் மூன்று அம்சங்கள்

மித்யாவாகவும் இருக்கின்றன. அந்த துரீய ஆத்ம ஸ்வரூபம் விரிவாக விளக்கப்படுகின்றது (7).

ஓம் என்ற எழுத்து நான்கு அம்சங்களாகப் பிரிக்கப்படுகிறது. அதில் சப்த ரூபமாக மூன்று அம்சங்களும், சப்தமற்றதாக ஓர் அம்சமும் உள்ளன. சப்த ரூபமான மூன்று அம்சங்கள் முறையே அகாரம், உகாரம். மகாரம் அதாவது அ, உ, ம என்ற எழுத்துக்கள். இதில் இந்த மூன்று எழுத்துக்களும் முதல் மூன்று அவஸ்தைகளுடன் சேர்க்கப்படுகின்றன (8). ஆத்மாவின் முதல் பாதம் ஓங்காரத்தின் அகாரமாகவும் இரண்டாவது பாதம் உகார மாகவும் மூன்றாவது பாதம் மகாரமாகவும் இணைக்கப்படுகின்றன (9 -11). ஓங்காரத்தின் சப்தமற்ற பாதம் துரீயத்துடன் இணைக்கப் படுகிறது. துரீயத்தின் இலக்கணம் மீண்டும் கூறப்படுகிறது (12).

शान्तिपाठः

ஶாந்திபாட²꞉

भद्रं कर्णेभिः शृणुयाम देवाः । भद्रं पश्येमाक्षभिर्यजत्राः । स्थिरैरङ्गैस्तुष्टुवाँसस्तनूभिः। व्यशेम देवहितं यदायुः । स्वस्ति न इन्द्रो वृद्धश्रवाः। स्वस्ति नः पूषा विश्ववेदाः । स्वस्ति नस्तार्क्ष्यो अरिष्टनेमिः। स्वस्ति नो बृहस्पतिर्दधातु । ओं शान्तिः शान्तिः शान्तिः ।।

ப⁴த்³ரம்' கர்ணேபி⁴꞉ ஶ்ரு'ணுயாம தே³வா꞉ | ப⁴த்³ரம்' பஶ்யேமாக்ஷபி⁴ர்யஜத்ரா꞉ | ஸ்தி²ரைரங்கை³ஸ்துஷ்டுவாம்"ஸஸ்தனூபி⁴꞉| வ்யஶேம தே³வஹிதம்' யதா³யு꞉ | ஸ்வஸ்தி ந இந்த்³ரோ வ்ரு'த்³த⁴ஶ்ரவா꞉| ஸ்வஸ்தி ந꞉ பூஷா விஶ்வவேதா³꞉ | ஸ்வஸ்தி நஸ்தார்க்ஷ்யோ அரிஷ்டனேமி꞉| ஸ்வஸ்தி நோ ப்³ரு'ஹஸ்பதிர்த³தா⁴து | ஓம்' ஶாந்தி꞉ ஶாந்தி꞉ ஶாந்தி꞉ ||

देवाः {தே³வா꞉} = தேவர்களே; कर्णेभिः {கர்ணேபி⁴꞉} = செவிகளால்; भद्रं {ப⁴த்³ரம்} = நல்லதை; श्रणुयाम {ஶ்ர்ரு'ணுயாம} = கேட்போமாக; यजत्राः {யஜத்ரா꞉} = வணக்கத்திற்குரிய தேவர்களே; अक्षभिः {அக்ஷபி⁴꞉} = கண்களால்; भद्रं {ப⁴த்³ரம்} = நல்லதை; पश्येम {பஶ்யேம} = பார்ப்போமாக; स्थिरैः अङ्गैः {ஸ்தி²ரை꞉ அங்கை³꞉} = உறுதியான உறுப்புக்களுடன்; तनूभिः {தனூபி⁴꞉} = வேதங்களால் (உங்களை நாங்கள்); तुष्टुवांसः {துஷ்டுவாம்'ஸ꞉} = புகழ்ந்துகொண்டு; यद् आयुः {யத்³ ஆயு꞉} = எவ்வளவு ஆயுள்; देवहितं {தே³வஹிதம்'} = இறைவனால் (எங்களுக்கு) கொடுக்கப்பட்டுள்ளதோ (அதை); व्यशेम {வ்யஶேம} = அனுபவிப்போமாக; वृद्धश्रवाः {வ்ரு'த்³த⁴ஶ்ரவா꞉} = ஓங்கிய புகழையடைந்த; इन्द्रः {இந்த்³ர꞉} = இந்த்ரன்; नः {ந꞉} = எங்களுக்கு; स्वस्ति {ஸ்வஸ்தி} = நன்மையை (அருளட்டும்); विश्ववेदाः {விஶ்வவேதா³꞉} = அனைத்தையும் அறிகின்ற; पूषा {புஷா} = ஸூர்யதேவர்; नः {ந꞉} = எங்களுக்கு; स्वस्ति {ஸ்வஸ்தி} = நன்மையை (அருளட்டும்); अरिष्टनेमिः {அரிஷ்டனேமி꞉} = தடையின்றிச்செல்லும்; तार्क्ष्यः {தார்க்ஷ்ய꞉} = கருடதேவர்; नः {ந꞉} = எங்களுக்கு; स्वस्ति {ஸ்வஸ்தி} = நன்மையை (அருளட்டும்); बृहस्पतिः

{ப்³ரு'ஹஸ்பதி:} = ப்ருஹஸ்பதி (பேரறிவுடைய); नः {ந:} = எங்களுக்கு; स्वस्ति {ஸ்வஸ்தி} = நன்மையை; दधातु {த³தா⁴து} = அருளட்டும்; ओं शान्तिः {ஓம்' ஶாந்தி:} = ஓம் சாந்தி:; शान्तिः {ஶாந்தி:} = சாந்தி:; शान्तिः {ஶாந்தி:} = சாந்தி:

தேவர்களே, செவிகளால் நல்லதைக் கேட்போமாக. வணக்கத்திற்குரிய தேவர்களே, கண்களால் நல்லதைப் பார்ப்போமாக. உறுதியான உறுப்புக்களுடன் வேதங்களால் உங்களை நாங்கள் புகழ்ந்துகொண்டு எவ்வளவு ஆயுள் இறைவனால் எங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளதோ அதை அனுபவிப்போமாக. ஓங்கிய புகழையடைந்த இந்த்ரன் எங்களுக்கு நன்மையை அருளட்டும். அனைத்தையும் அறிகின்ற ஸூர்யதேவர் எங்களுக்கு நன்மையை அருளட்டும். தடையின்றிச் செல்லும் கருடதேவர் எங்களுக்கு நன்மையை அருளட்டும். பேரறிவுடைய ப்ருஹஸ்பதி எங்களுக்கு நன்மையை அருளட்டும். ஓம் சாந்தி சாந்தி சாந்தி.

ओमित्येतदक्षरमिदँसर्वं तस्योपव्याख्यानं भूतं भवद्भविष्यदिति
सर्वमोङ्कार एव । यच्चान्यत् त्रिकालातीतं तदप्योङ्कार एव ||१||

ஓமித்யேதத³க்ஷரமித³ம்"ஸர்வம்' தஸ்யோபவ்யாக்²யானம்' பூ⁴தம்' ப⁴வத்³ப⁴விஷ்யதி³தி
ஸர்வமோங்கார ஏவ | யச்சான்யத் த்ரிகாலாதீதம்' தத³ப்யோங்கார ஏவ ||1||

ओं {ஓம்'} = ஓம்; इति {இதி} = என்கின்ற; एतत् अक्षरं {ஏதத் அக்ஷரம்'} = இந்த எழுத்து; इदं सर्वं {இத³ம்' ஸர்வம்'} = இவை அனைத்துமாக உள்ளது; तस्य {தஸ்ய} = அதனுடைய (ஓங்காரத்தின்); उपव्याख्यानं {உபவ்யாக்²யானம்'} = முழுமையான தெளிவான விளக்கம் (இப்பொழுது ஆரம்பிக்கப்படுகிறது); भूतं {பூ⁴தம்' } = கடந்தது; भवत् {ப⁴வத்} = இருப்பது; भविष्यत् {ப⁴விஷ்யத்} = வரப்போவது; इति सर्वं {இதி ஸர்வம்'} = ஆகிய அனைத்தும்; ओङ्कारः एव {ஓங்கார: ஏவ} = ஓங்காரம் தான்; यत् च अन्यत् {யத் ச அன்யத்} = எந்த ஒன்று; त्रिकालातीतं {த்ரிகாலாதீதம்'} = மூன்று காலத்தையும் கடந்துள்ளதோ; तत् अपि {தத் அபி} = அதுவும்; ओङ्कारः एव {ஓங்கார: ஏவ} = ஓங்காரமே

ஓம் என்கின்ற இந்த எழுத்து இவை அனைத்துமாக உள்ளது. ஓங்காரத்தின் முழுமையான, தெளிவான விளக்கம் இப்பொழுது ஆரம்பிக்கப்படுகிறது. கடந்தது, இருப்பது, வரப்போவது ஆகிய அனைத்தும் ஓங்காரம்தான். எந்த ஒன்று மூன்று காலத்தையும் கடந்துள்ளதோ, அதுவும் ஓங்காரமே.

மூன்று காலத்தைக் கடந்துள்ளது என்பது இங்கு மாயா தத்துவத்தைக் குறிக்கிறது. தோன்றிய உலகமும் அதற்குக் காரணமான மாயையும் ஓங்காரத்தின் அகார-உகார -மகார ஸ்வரூபம். ஓங்காரத்தின் மற்றொரு அம்சமான அசப்தஸ்வரூபம் துரீய ஆத்மாவாகும். இந்த ஓங்கார விசாரம் எட்டாவது மந்த்ரத்திலிருந்து பன்னிரண்டாவது மந்த்ரம் வரை செய்யப்படும்.

सर्वं ह्येतद् ब्रह्म अयमात्मा ब्रह्म सोऽयमात्मा चतुष्पात् ||२||

ஸர்வம்’ ஹ்யேதத்³ ப்³ரஹ்ம அயமாத்மா ப்³ரஹ்ம ஸோ(அ)யமாத்மா சதுஷ்யாத் ||2||

एतत् {ஏதத்} = இவை; सर्वं {ஸர்வம்’} = அனைத்தும்; ब्रह्म हि {ப்³ரஹ்ம ஹி} = ப்ரஹ்மனே; अयं {அயம்’} = இந்த; आत्मा {ஆத்மா} = ஆத்மா; ब्रह्म {ப்³ரஹ்ம} = ப்ரஹ்மன்; सः {ஸ:} = அந்த (ப்ரஹ்மனான); अयं {அயம்’} = இந்த; आत्मा {ஆத்மா} = ஆத்மா; चतुष्पात् {சதுஷ்பாத்} = நான்கு பாதங்களை உடையது.

இவை அனைத்தும் ப்ரஹ்மனே. இந்த ஆத்மா ப்ரஹ்மன். அந்த ப்ரஹ்மனான இந்த ஆத்மா நான்கு பாதங்களை உடையது.

இங்கு ஆரம்பம் ஆகின்ற ஆத்மவிசாரம் ஏழாவது மந்த்ரத்தில் முடிவுறும். ஆத்மவிசாரம் என்பது நான் என்ற சொல்லின் உண்மையான பொருளைக் கண்டறிய மேற்கொள்ளப்படும் முயற்சி.

जागरितस्थानो बहिष्प्रज्ञः सप्ताङ्ग एकोनविंशतिमुखः स्थूलभुग् वैश्वानरः प्रथमः पादः ||३||

ஜாக³ரிதஸ்தா²னோ ப³ஹிஷ்ப்ரஜ்ஞ: ஸப்தாங்க³ ஏகோனவிம்’ஶதிமுக²:
ஸ்து²லபு⁴க்³ வைஶ்வானர: ப்ரத²ம: பாத³: ||3||

जागरितस्थान: {ஜாக³ரிதஸ்தா²ன:} = விழிப்பு நிலையை உடைய; बहिष्प्रज्ञ: {ப³ஹிஷ்ப்ரஜ்ஞ:} = வெளிவிஷயங்களை அறிகின்ற; सप्ताङ्ग: {ஸப்தாங்க³:} = ஏழு அங்கங்களை உடைய; एकोनविंशतिमुख: {ஏகோனவிம்’ஶதிமுக²:} = பத்தொன்பது வாய்களை உடைய; स्थूलभुक् {ஸ்து²லபு⁴க்} = ஸ்தூல விஷயங்களை அனுபவிக்கின்ற; वैश्वानर: {வைஶ்வானர:} = வைச்வாநரன்; प्रथम: {ப்ரத²ம:} = முதல்; पाद: {பாத³:} = பாதம்.

விழிப்பு நிலையை உடைய, வெளிவிஷயங்களை அறிகின்ற, ஏழு அங்கங்களை உடைய, பத்தொன்பது வாய்களை உடைய, ஸ்தூல விஷயங்களை அனுபவிக்கின்ற வைச்வாநரன் முதல் பாதம்.

स्वप्नस्थानोऽन्तः प्रज्ञः सप्ताङ्ग एकोनविंशतिमुखः प्रविविक्तभुक् तैजसो द्वितीयः पादः ||४||

ஸ்வப்னஸ்தா²னோ(அ)ந்த: ப்ரஜ்ஞ: ஸப்தாங்க³ ஏகோனவிம்’ஶதிமுக²:
ப்ரவிவிக்தபு⁴க் தைஜஸோ த்³வதீய: பாத³: ||4||

स्वप्नस्थान: {ஸ்வப்னஸ்தா²ன:} = கனவு நிலையை உடைய; अन्त:प्रज्ञ: {அந்த:ப்ரஜ்ஞ:} = உள்விஷயங்களை அறிகின்ற; सप्ताङ्ग: {ஸப்தாங்க³:} = ஏழு அங்கங்களை உடைய; एकोनविंशतिमुख: {ஏகோனவிம்’ஶதிமுக²:} = பத்தொன்பது வாய்களை உடைய; प्रविविक्तभुक्

{ப்ரவிவிக்தபு⁴க்} = ஸூக்ஷ்ம விஷயங்களை அனுபவிக்கின்ற; तैजसः {தைஜஸ:} = தைஜஸன்; द्वितीयः {த்³விதீய:} = இரண்டாவது; पादः {பாத³:} = பாதம்.

கனவு நிலையை உடைய, உள்விஷயங்களை அறிகின்ற, ஏழு அங்கங்களை உடைய, பத்தொன்பது வாய்களை உடைய, ஸூக்ஷ்ம விஷயங்களை அனுபவிக்கின்ற தைஜஸன் இரண்டாவது பாதம்.

यत्र सुप्तो न कञ्चन कामं कामयते न कञ्चन स्वप्नं पश्यति तत्सुषुप्तम् ।

सुषुप्तस्थान एकीभूतः प्रज्ञानघन एवानन्दमयो ह्यानन्दभुक् चेतोमुखः प्राज्ञस्तृतीयः पादः ॥५॥

யத்ர ஸுப்தோ ந கஞ்சன காமம்’ காமயதே ந கஞ்சன ஸ்வப்னம்’ பஶ்யதி தத்ஸுஷுப்தம்|

ஸுஷுப்தஸ்தா²ன ஏகீபூ⁴த: ப்ரஜ்ஞானக⁴ன ஏவானந்த³மயோ ஹ்யானந்த³பு⁴க் சேதோமுக²: ப்ராஜ்ஞஸ்த்ரு’தீய: பாத³: ||5||

यत्र {யத்ர} = எந்த நிலையில் இருக்கும்போது; सुप्तः {ஸுப்த:} = (ஒருவன் தன்னை) அறியாதவனாக இருக்கிறானோ; कञ्चन {கஞ்சன} = எந்த; कामं {காமம்’} = காமம் பொருளையும்; न कामयते {ந காமயதே} = ஆசைப்படுவதில்லையோ; कञ्चन {கஞ்சன} = எந்த; स्वप्नं {ஸ்வப்னம்’} = கனவையும்; न पश्यति {ந பஶ்யதி} = பார்ப்பதில்லையோ; तत् {தத்} = அது; सुषुप्तं {ஸுஷுப்தம்’} = உறக்கநிலை; सुषुप्तस्थानः {ஸுஷுப்தஸ்தா²ன:} = உறக்கநிலையை உடைய; एकीभूतः {ஏகீபூ⁴த:} = ஒன்றாக இருக்கின்ற; प्रज्ञानघनः एव {ப்ரஜ்ஞானக⁴ன: ஏவ} = விதவிதமான அறிவின்றி வெறும் அறிவின் குவியலாக மட்டும் உள்ள; आनन्दमयः {ஆனந்த³மய:} = ஆனந்தமயமான; आनन्दभुक् हि {ஆனந்த³பு⁴க் ஹி} = ஆனந்தத்தை அனுபவிக்கின்ற; चेतोमुखः {சேதோமுக²:} = விழிப்புக்கும் கனவுக்கும் வழியாக இருக்கின்ற; प्राज्ञः {ப்ராஜ்ஞ:} = ப்ரஞானக; तृतीयः {த்ரு’தீய:} = மூன்றாவது ; पादः {பாத³:} = பாதம்

எந்த நிலையில் இருக்கும்போது ஒருவன் தன்னை அறியாதவனாக இருக்கிறானோ, எந்தப் பொருளையும் ஆசைப் படுவதில்லையோ, எந்தக் கனவையும் பார்ப்பதில்லையோ அது உறக்கநிலை. உறக்கநிலையை உடைய. ஒன்றாக இருக்கின்ற, விதவிதமான அறிவின்றி வெறும் அறிவின் குவியலாக மட்டும் உள்ள, ஆனந்தமயமான, ஆனந்தத்தை அனுபவிக்கின்ற, விழிப்புக்கும் கனவுக்கும் வழியாக இருக்கின்ற ப்ராஞன் மூன்றாவது பாதம்.

एष सर्वेश्वर एष सर्वज्ञ एषोऽन्तर्याम्येष योनिः सर्वस्य प्रभवाप्ययौ हि भूतानाम् ॥६॥

ஏஷ ஸர்வேஶ்வர ஏஷ ஸர்வஜ்ஞ ஏஷோ(அ)ந்தர்யாம்யேஷ யோனி: ஸர்வஸ்ய ப்ரப⁴வாப்யயௌ ஹி பூ⁴தானாம் ||6||

एष: {ஏஷ:} = இவர்; सर्वेश्वर: {ஸர்வேஶ்வர:} = அனைத்தையும் ஆள்பவர்; एष: {ஏஷ:} = இவர்; सर्वज्ञ: {ஸர்வஜ்ஞ:} = அனைத்தையும் அறிபவர்; एष: {ஏஷ:} = இவர்; अन्तर्यामी {அந்தர்யாமீ} = (அனைத்திலும்) ஊடுருவி இருப்பவர்; एष: {ஏஷ:} = இவர்; सर्वस्य {ஸர்வஸ்ய} = அனைத்திற்கும்; योनि: {யோனி:} = உபாதான காரணம்; भूतानां हि {பூ4தானாம்' ஹி} = எல்லா உயிரினங்களுடைய; प्रभव-अप्ययौ {ப்ரப4வ-அப்யயௌ} = தோற்றத்துக்கும் லயத்துக்கும் (இருப்பிடமாக இவரே இருக்கிறார்).

இவர் அனைத்தையும் ஆள்பவர். இவர் அனைத்தையும் அறிபவர். இவர் அனைத்திலும் ஊடுருவி இருப்பவர். இவர் அனைத்திற்கும் உபாதான காரணம். எல்லா உயிரினங்களுடைய தோற்றத்துக்கும் லயத்துக்கும் இருப்பிடமாக இவரே இருக்கிறார்.

नान्तः प्रज्ञं न बहिष्प्रज्ञं नोभयतः प्रज्ञं न प्रज्ञानघनं न प्रज्ञं नाप्रज्ञम् | अदृष्टमव्यवहार्यमग्राह्यमलक्षण - मचिन्त्यमव्यपदेश्य मेकात्मप्रत्ययसारं प्रपञ्चोपशमं शान्तं शिवमद्वैतं चतुर्थं मन्यन्ते स आत्मा स विज्ञेयः ||७||

நாந்த: ப்ரஜ்ஞம்' ந ப3ஹிஷ்ப்ரஜ்ஞம்' நோப4யத: ப்ரஜ்ஞம்' ந ப்ரஜ்ஞானக4னம்' ந ப்ரஜ்ஞம்' நாப்ரஜ்ஞம் | அத்3ரு'ஷ்டமவ்யவஹார்யமக்3ராஹ்யமலக்ஷணமசிந்த்யமவ்யபதே3ஶ்ய மேகாத்மப்ரத்யயஸாரம்' ப்ரபஞ்சோபஶமம்' ஶாந்தம்' ஶிவமத்3வைதம்' சதுர்த2ம்' மன்யந்தே ஸ ஆத்மா ஸ விஜ்ஞேய: ||7||

न बहिष्प्रज्ञं {ந ப3ஹிஷ்ப்ரஜ்ஞம்'} = (துரீயன்) வெளி விஷயங்களை அறிபவன் அல்ல; न अन्त:प्रज्ञं {ந அந்த:ப்ரஜ்ஞம்'} = உள் விஷயங்களை அறிபவன் அல்ல; न उभयत:प्रज्ञं {ந உப4யத:ப்ரஜ்ஞம்'} = இடைப்பட்ட நிலையில் இருப்பவன் அல்ல; न प्रज्ञानघनं {ந ப்ரஜ்ஞானக4னம்'} = மொத்தமாக உள்ள சாமான்ய அறிவும் அல்ல; न प्रज्ञं {ந ப்ரஜ்ஞம்'} = அனைத்தையும் சேர்ந்து அறிபவன் அல்ல; न अप्रज्ञं {ந அப்ரஜ்ஞம்'} = ஜடமும் அல்ல; अदृष्टं {அத்3ரு'ஷ்டம்'} = (ஞானேந்த்ரியங்களினால்) அறியப்படாதது; अव्यवहार्यं {அவ்யவஹார்யம்'} = செயல்களுக்குள் வராதது; अग्राह्यं {அக்3ராஹ்யம்'} = (கர்மேந்த்ரியங்களால்) க்ரஹிக்கப்படாதது; अलक्षणं {அலக்ஷணம்'} = யூகத்திற்கு அப்பாற்பட்டது; अचिन्त्यं {அசிந்த்யம்'} = சிந்தனைக்கு எட்டாதது; अव्यपदेश्यं {அவ்யபதே3ஶ்யம்'} = வாக்கால் விளக்க முடியாதது; एक - आत्म - प्र्प्यय - सारं {ஏக - ஆத்ம - ப்ரப்யய - ஸாரம்'} = நான் என்ற எண்ணத் தொடர்ச்சியினால் அறியப்படக் கூடியது; प्रपञ्चोपशमं {ப்ரபஞ்சோபஶமம்'} = உலகமற்றது; शान्तं {ஶாந்தம்'} = அமைதி ஸ்வரூபமானது; शिवं {ஶிவம்} = மங்களரூபமானது; अद्वैतं {அத்3வைதம்'} = இரண்டற்றது; चतुर्थं {சதுர்த2ம்'} = நான்காவது (பாதத்தைப்போல்); मन्यन्ते {மன்யந்தே} = கருதப்படுகிறது; स: {ஸ:} = அதுவே; आत्मा {ஆத்மா} = ஆத்மா; स: {ஸ:} = அதுவே; विज्ञेय: {விஜ்ஞேய:} = அறியத்தக்கது.

துரீயன் வெளி விஷயங்களை அறிபவன் அல்ல. உள் விஷயங்களை அறிபவன் அல்ல. இடைப்பட்ட நிலையில் இருப்பவன் அல்ல. மொத்தமாக உள்ள சாமான்ய அறிவும் அல்ல. அனைத்தையும் சேர்ந்து அறிபவன் அல்ல. ஜடமும் அல்ல. ஞானேந்த்ரியங்களினால் அறியப்படாதது. செயல்களுக்குள் வராதது. கர்மேந்த்ரியங்களினால் க்ரஹிக்கப்படாதது. யூகத்திற்கு அப்பாற்பட்டது. சிந்தனைக்கு எட்டாதது. வாக்கால் விளக்க முடியாதது. நான் என்ற எண்ணத் தொடர்ச்சியினால் அறியப்படக்கூடியது. உலகமற்றது. அமைதி ஸ்வரூபமனாது. மங்களரூபமானது. இரண்டற்றது. நான்காவது பாதத்தைப் போல் கருதப்படுகிறது. அதுவே ஆத்மா. அதுவே அறியத்தக்கது.

सोऽयमात्माध्यक्षरमोङ्कारोऽधिमात्रं पादा मात्रा मात्राश्च पादा अकार उकारो मकार इति ||८||

ஸோ(அ)யமாத்மாத்⁴யக்ஷரமோங்காரோ(அ)தி⁴மாத்ரம்' பாதா³ மாத்ரா மாத்ராஶ்ச பாதா³ அகார உகாரோ மகார இதி ||8||

सः अयं {ஸ: அயம்'} = அந்த; आत्मा {ஆத்மா} = ஆத்மாவே; अध्यक्षरं {அத்⁴யக்ஷரம்'} = ஓர் எழுத்தாகவும்; अधिमात्रं {அதி⁴மாத்ரம்'} = தனித்தனி எழுத்தாகவும் இருக்கின்ற; ओङ्कारः {ஓங்கார:} = ஓங்காரம் ஆகும்; पादाः {பாதா³:} = பாதங்களே; मात्राः {மாத்ரா:} ஃ எழுத்துக்கள்; मात्राः च {மாத்ரா: ச} = எழுத்துக்களே; पादाः {பாதா³:} = பாதங்கள்; अकारः {அகார:} = அகாரம்; उकारः {உகார:} = உகாரம்; मकारः {மகார:} = மகாரம்; इति {இதி} = என்பன (ஓங்காரத்தின் எழுத்துக்கள்).

அந்த ஆத்மாவே, ஓர் எழுத்தாகவும் தனித்தனி எழுத்தாகவும் இருக்கின்ற ஓங்காரம் ஆகும். பாதங்களே எழுத்துக்கள். எழுத்துக்களே பாதங்கள். அகாரம், உகாரம், மகாரம் என்பன ஓங்காரத்தின் எழுத்துக்கள்.

जागरितस्थानो वैश्वानरोऽकारः प्रथमा मात्राप्तेरादिमत्त्वाद्वाप्नोति ह वै सर्वान्कामानादिश्च भवति य एवं वेद ||९||

ஜாக³ரிதஸ்தா²னோ வைஶ்வானரோ(அ)கார: ப்ரத²மா மாத்ராப்தேராதி³மத்த்வாத்³வா - ப்னோதி ஹ வை ஸர்வான்காமாநாதி³ஶ்ச ப⁴வதி ய ஏவம்' வேத³ ||9||

आप्तेः {ஆப்தே:} = வ்யாபித்தல் (என்ற ஒற்றுமை)யாலும்; आदिमत्त्वात् वा {ஆதி³மத்த்வாத் வா} = முதலாக இருத்தல் (என்ற ஒற்றுமை)யாலும்; जागरितस्थानः {ஜாக³ரிதஸ்தா²ன:} = விழிப்பு நிலையை உடைய; वैश्वानरः {வைஶ்வானர:} = வைச்வாநரன்; अकारः {அகார:} = அகாரமான; प्रथमा {ப்ரத²மா} = முதல்; मात्रा {மாத்ரா} = எழுத்து; यः {ய:} = யார்; एवं {ஏவம்'} = இவ்விதம்; वेद {வேத³} = த்யானிக்கிறானோ; सर्वान् कामान् ह वै {ஸர்வான் காமான் ஹ வை}

= (அவன்) அனைத்துப் பொருள்களையும்; आप्नोति {ஆப்னோதி} = அடைகிறான்; आदिः च {ஆதி³: ச} = முதன்மையானவனாகவும்; भवति {ப⁴வதி} = ஆகிறான்.

வ்யாபித்தல் என்ற ஒற்றுமையாலும் முதலாக இருத்தல் என்ற ஒற்றுமையாலும், விழிப்பு நிலையை உடைய வைச்வாநரன் அகாரமான முதல் எழுத்து. யார் இவ்விதம் த்யானிக்கிறானோ, அவன் அனைத்துப் பொருள்களையும் அடைகிறான். முதன்மையானவனாகவும் ஆகிறான்.

स्वप्नस्थानस्तैजस उकारो द्वितीया मात्रोत्कर्षादुभयत्वाद्वोत्कर्षति ह वै ज्ञानसन्ततिं समानश्च भवति नास्याब्रह्मवित्कुले भवति य एवं वेद ||१०||

ஸ்வப்னஸ்தா²னஸ்தைஜஸ உகாரோ த்³விதீயா மாத்ரோத்கர்ஷாது³ப⁴யத்வாத்³ - வோத்கர்ஷதி ஹ வை ஜ்ஞானஸந்ததிம்' ஸமானஶ்ச ப⁴வதி நாஸ்யாப்³ரஹ்மவித்குலே ப⁴வதி ய ஏவம்' வேத³ ||10||

उत्कर्षात् {உத்கர்ஷாத்} = மேலாக இருத்தல் (என்ற ஒற்றுமை)யாலும்; अभयत्वात् वा {அப⁴யத்வாத் வா} = இடையில் இருத்தல் (என்ற ஒற்றுமை)யாலும்; स्वप्नस्थानः {ஸ்வப்னஸ்தா²ன:} = கனவு நிலையை உடைய; तैजसः {தைஜஸ:} = தைஜஸன்; उकारः {உகார:} = உகாரமான; द्वितीया {த்³விதீயா} = இரண்டாவது; मात्रा {மாத்ரா} = எழுத்து; यः {ய:} = யார்; एवं {ஏவம்'} = இவ்விதம்; वेद {வேத³} = த்யானிக்கிறானோ (அவன்); ज्ञानसन्ततिं ह वै {ஜ்ஞானஸந்ததிம்' ஹ வை} = ஞானத்தின் பாரம்பர்யத்தை; उत्कर्षति {உத்கர்ஷதி} = வளர்க்கிறான்; समानः च {ஸமான: ச} = (அனைவரிடமும்) ஸமமாகவும்; भवति {ப⁴வதி} = இருக்கிறான்; अस्य {அஸ்ய} = அவனுடைய; कुले {குலே} = குலத்தில்; अब्रह्मवित् {அப்³ரஹ்மவித்} = ப்ரஹ்மனை அறியாதவர்; न भवति {ந ப⁴வதி} = இருக்கமாட்டார்.

மேலாக இருத்தல் என்ற ஒற்றுமையாலும் இடையில் இருத்தல் என்ற ஒற்றுமையாலும், கனவு நிலையை உடைய தைஜஸன் உகாரமான இரண்டாவது எழுத்து. யார் இவ்விதம் த்யானிக்கிறானோ, அவன் ஞானத்தின் பாரம்பர்யத்தை வளர்க்கிறான். அனைவரிடமும் ஸமமாகவும் இருக்கிறான். அவனுடைய குலத்தில் ப்ரஹ்மனை அறியாதவர் இருக்க மாட்டார்.

सुषुप्तस्थानः प्राज्ञो मकारस्तृतीया मात्रा मितेरपीतेर्वा मिनोति ह वा इदँसर्वमपीतिश्च भवति य एवं वेद ||११||

ஸுஷுப்தஸ்தா²ன: ப்ராஜ்ஞோ மகாரஸ்த்ரு'தீயா மாத்ரா மிதேரபீதேர்வா மினோதி ஹ வா இத³ம்"ஸர்வமபீதிஶ்ச ப⁴வதி ய ஏவம்' வேத³ ||11||

मिते {மிதே} = அளத்தல் (என்ற ஒற்றுமை)யாலும்; अपीतेः वा {அபீதே: வா} = ஒடுக்கத்தின் இருப்பிடமாக இருத்தல் (என்ற ஒற்றுமை)யாலும்; सुषुप्रस्थानः {ஸுஷுப்ரஸ்தா²ன:} =

உறக்கநிலையை உடைய; प्राज्ञ: {ப்ராஜ்ஞ:} = ப்ராஞன்; मकार: {மகார:} = மகாரமான; तृतीया {த்ரு'தீயா} = மூன்றாவது; मात्रा {மாத்ரா} = எழுத்து; य: {ய:} = யார்; एवं {ஏவம்'} = இவ்விதம்; वेद {வேத^{3}} = த்யானிக்கிறானோ (அவன்); इदं सर्वं ह वै {இத^{3}ம்' ஸர்வம்' ஹ வை} = இவை அனைத்தையும்; मिनोति {மினோதி} = சரியாகப் புரிந்து கொள்வான்; अपीति: च {அபீதி: ச} = ஒடுக்கத்தின் இருப்பிடமாகவும்; भवति {ப^{4}வதி} = ஆகிறான்.

அளத்தல் என்ற ஒற்றுமையாலும் ஒடுக்கத்தின் இருப்பிடமாக இருத்தல் என்ற ஒற்றுமையாலும், உறக்கநிலையை உடைய ப்ராஞன் மகாரமான மூன்றாவது எழுத்து. யார் இவ்விதம் த்யானிக்கிறானோ, அவன் இவை அனைத்தையும் சரியாகப் புரிந்து கொள்வான். ஒடுக்கத்தின் இருப்பிடமாகவும் ஆகிறான்.

अमात्रश्चतुर्थोऽव्यवहार्यः प्रपञ्चोपशमः शिवोऽद्वैत एवमोङ्कार आत्मैव संविशत्यात्मनात्मानं य एवं वेद ||१२||

அமாத்ரஸ்சதுர்தோ^{2}(அ)வ்யவஹார்ய: ப்ரபஞ்சோபஶம: ஶிவோ(அ)த்^{3}வைத ஏவமோங்கார ஆத்மைவ ஸம்'விஶத்யாத்மனாத்மானம்' ய ஏவம்' வேத^{3} ||12||

चतुर्थ: {சதுர்த^{2}:} = துரீயன்; अमात्र {அமாத்ர} = சப்தமற்றவன்; अव्यवहार्य: {அவ்யவஹார்ய:} = செயல்களுக்கு அப்பாற்பட்டவன்; प्रपञ्चोपशम: {ப்ரபஞ்சோபஶம:} = உலகமற்றவன்; शिव: {ஶிவ:} = மங்களமானவன்; अद्वैत: {அத்^{3}வைத:} = இரண்டற்றவன்; एवं {ஏவம்'} = இவ்விதம்; ओङ्कार: {ஓங்கார:} = ஓங்காரம்; आत्मा एव {ஆத்மா ஏவ} = ஆத்மாதான்; य: {ய:} = யார்; एवं {ஏவம்'} = இவ்விதம்; वेद {வேத^{3}} = அறிகிறானோ (அவன்); आत्मना {ஆத்மனா} = தன்னால்; आत्मानं {ஆத்மானம்'} = தன்னை; संविशति {ஸம்'விஶதி} = அடைகிறான்.

துரீயன் சப்தமற்றவன். செயல்களுக்கு அப்பாற்பட்டவன். உலகமற்றவன். மங்களமானவன். இரண்டற்றவன். இவ்விதம் ஓங்காரம் ஆத்மாதான். யார் இவ்விதம் அறிகிறானோ, அவன் தன்னால் தன்னை அடைகிறான்.

|| माण्डूक्योपनिषद् समाप्ता ||

மாண்டூ^{3}க்யோபநிஷத்^{3} முடிவுற்றது.

Our Website :

Our You Tube :

Our Mail ID : Info@voiceofjagadguru.com



Editorial Board		
Sri P A Murali	Hon' Advisor	Administrator & CEO, Sri Sringeri Mutt & It's Properties, Sringerī
Sri S N Krishnamurthy	Hon' Editor	Sri Sringeri Mutt, Sringeri
Sri Tangirala Shiva Kumara Sharma	Hon' Editor	Sri Sringeri Mutt, Sringeri
PujyaSri Swami Guruparananda	Hon' Editor	Founder Poornalaya, Chennai and Mentor Sri Swami Chidbhavananda Ashram, Vedapuri, Teni
Sri B Vijay Anand	Web Director	Coimbatore
Smt. B Srimathi Veeramani	Web Asst. Director & Chief Editor	Tirunelveli